செ.வெ.எண்.43 நாள்.25.01.2018

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**தேசிய வாக்காளர் தினத்தையொட்டி பள்ளி மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு கோப்பை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழஙகினார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8வது தேசிய வாக்காளர் தினம் 25.01.2018 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக காலை 9.00 மணியளவில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட பேரணி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது. மேற்படி பேரணி அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் வரை சென்று முடிவடைந்தது.

பின்னர் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேர்தலில் வாக்குபதிவு மரபுகளை கடைபிடிப்பதற்காக இந்திய தேர்தல் ஆணையம் 25.01.1950 ல் தோற்றுவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு முதல் அந்நாளை தேசிய வாக்காளர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 37,25,471 பேர் வாக்காளர்களாக உள்ளனர். அவர்களில் 18,42,815 பேர் ஆண் வாக்காளர்கள், 18,82,309 பேர் பெண் வாக்காளர்கள் 347 பேர் இதர பிரிவினர் ஆகும்.

தற்போது 13,749 பேர் புதிய இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் தஙகளை சேர்த்துள்ளனர். இஙகு வருகை பரிந்துள்ள மாணவ, மாணவிகளில் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் அனைவரும் வாக்காளராக பதிவு பெற்றுள்ள அனைவரும் வாக்குபதிவு நாளன்று வாக்களித்து தஙகளது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்தார்.

அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் புதிய வாக்காளர்களுக்கு வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. 01.01.2000 அன்று பிறந்த மில்லேணியம் வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களும், வழங்கப்பட்டது. மேலும் "Proved to be a Voter" Ready to Vote " என்ற தலைப்பின்கீழ் பள்ளி

மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு முதல் மூன்று இடம் பிடித்த மாணவ / மாணவிகளுக்கு பரிசுக் கோப்பை மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பள்ளி – கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, காஞ்சிபுரம், வருவாய் கோட்ட அலுவலர் திரு.ராஜீ, திட்ட இயககுநர், மாவட்ட ஊராகவளர்ச்சி முகமை திரு.வை.ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (தேர்தல்)(பொ) திரு.சக்திவேல் மற்றும் காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு.நாகராஜன் ஆகியோர்கள் உள்பட அரசு அலுவலர்கள், பள்ளி / கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம